பிப்ரவரி 2026 மலர்–13 இதழ்–2 ISSN : 2349 - 1914

# டுடே இதழ்

## (பன்னாட்டு ஆய்விதழ்)

## (TODAY ITHAZH-International Journal)

ஆசிரியர் – வெளியிடுபவர்

**ரெ.பாபு**

**TODAY PUBLICATION**
192, Bells Road, Chepauk,
Chennai-600 005
போன். : 044–28553797, செல்: 9840083738 Email: todaybabu@gmail.com, babu_today@yahoo.com

ISSN : 2349 - 1914


## ஆசிரியர் குழு

- முனைவர் **மதுரை வீரன்** மாநிலக் கல்லூரி, சென்னை.
- முனைவர் **நீல.மாதவன்** காஞ்சி சங்கரா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
- முனைவர் **மு.சற்குணவதி,** முனைவர் **ஆ.ஏகாம்பரம்**
  சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.
- முனைவர் **ந. கலைவாணி,** முனைவர் **மா.லோகநாயகி**
  இராணிமேரி கல்லூரி, சென்னை.
- முனைவர் **மு. கலைமாமணி,**
  அரசு கலைக் கல்லூரி, திருவண்ணாமலை.
- **திருமதி. சி. சுப்புலெட்சுமி**
  Ministry of Education • 1 North Buona Vista Drive, Singapore 138675
- திருமதி. விஜயராணி மூர்த்தி
  1,Strathmore Road Singapore 148800
- **திருமதி. தமிழரசி சுப்பிரமணியம்**
  Master Teacher for Tamil Language,Language Centre, 2 Beatty Road, Singapore
- **Mrs Silambayee Muthusamy**
  Ministry of Education • 1 North Buona Vista Drive, Singapore 138675
- முனைவர் **ப.கமலக்கண்ணன்** முனைவர் **சி.அங்கயற்கண்ணி**
  சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, ஈரோடு.
- **ம.பிரகாஷ், அ.ரேவதி**
  ஆய்வாளர்கள், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.
- **த. இராஜீவ் காந்தி**
  ஆய்வாளர், இராணிமேரி கல்லூரி, சென்னை.
- Mr. **Srinivasan Ramachandran**
  Dr. Ambedkar Centre for Economic Studies, University of Madras. Chennai.
- **Dr. S. Sivakumar**
  Dr. Ambedkar Govt. Law College, Madras High Court Campus, Chennai.

## வடிவமைப்பு

**வி.ஷீலா**


Owned, Printed and Published by R. Babu from No: 192, Bells Road, SR Complex, Ist Floor, Chepauk, Chennai-5 Printed at Today Printers,192, Bells Road, SR Complex, Ist Floor, Chepauk, Chennai-600 005 Editor. R. Babu

அலுவலகம்

192, பெல்ஸ் சாலை, எஸ்.ஆர். காம்ப்ளக்ஸ்
சேப்பாக்கம், சென்னை – 600 005.
போன். : 044–28553797, செல்: 9840083738 Email: todaybabu@gmail.com, babu_today@yahoo.com

 ISSN : 2349 - 1914

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தமிழ் இலக்கண நூல்கள் கூறும் சார்பெழுத்துகளின் வகைமைகள் | |
| | – பா. சங்கீதா & முனைவர் யு. துர்காதேவி | 5 |
| 2. | கடவுள் கோட்பாடும் சித்தரும் | |
| | – வெ. இராம்ராஜ் | 10 |
| 3. | வாணகோப்பாடிநாட்டு ஜம்பைகாசி விசுவநாதர் கோயில் ஓர் வரலாற்றாய்வு | |
| | – வே. ராமச்சந்திரன் | 16 |
| 4. | அறம் – நீதி சொற்பொருள் விளக்கம் | |
| | – அ. ஷமிம் நிஷா | 22 |
| 5. | கரிகால் பெருவளத்தானின் சிறப்பும்பெருமையும் | |
| | – பெ. தேவி | 25 |
| 6. | சித்தர்களின் இறையியல் முரண்பாட்டுச் சிந்தனைகள் | |
| | – அ.ஜோ. தியோடர் ராஜ்குமார் | 30 |
| 7. | தலைவர் இரட்டை மலை சீனிவாசன் | |
| | – கா. லதா | 35 |
| 8. | காரை. இறையடியானின் தனித்தமிழ் இலக்கிய இதழ் ‘பூஞ்சோலை’ | |
| | – மு. முஜீபுர்ரகுமான் | 40 |
| 9. | பெண்களின் நிலையும் மறுமலர்ச்சியும் | |
| | – மு. சின்னப்பன் | 44 |
| 10. | மதுவினால் பெண்கள் வாழ்வில் நிகழும் இன்னல்கள் | |
| | – இரா. சித்ராலயா | 52 |
| 11. | சீவக சிந்தாமணியில் வெட்சித்திணை மரபு | |
| | – கு. இளங்கோவன் | 58 |
| 12. | பத்திரகிரியார் பாடல்களில் இறைச்சிந்தனைகள் | |
| | – கு. இரமேஷ் | 63 |
| 13. | சிரேனிகன் போற்றும் சிரீவர்த்தமானன் | |
| | – ஜி. சன்மதி | 67 |

ISSN : 2349 - 1914

14. சங்க இலக்கியத்தில் மருத்துவம்
– தி. கல்பனாதேவி 72
15. ஈழத்தின் தமிழிசை மரபு
– த. ராபாட் அருட்சேகரன் 81
16. மகளிர் மேம்பாட்டில் மனவளக்கலையின் பங்கு
– சு. இராஜேஸ்வரி முனைவர் சு. பிரசாத் 87
17. கலைஞரின் பராசக்தி திரைப்பட வசனம் ஒரு பார்வை
– விஜயலட்சுமி 91
18. தமிழ்த் திரைப்பாடல்கள் காட்டும் சமுதாய மரபுகள்
– வெ. கணேசன் 95
19. சித்தர்களின் உலகம்
– இர. இராஜராஜேஸ்வரி 100
20. அண்ணலாரும் அரசியலும்
– ஹாஜா முஹினுதீன் 104
21. டி.கே.சி. ஜஸ்டிஸ் மகாராசனுக்கு எழுதிய மடல்கள்
– லி. செல்வமீனா 107
22. சுவிசேஷ தென்றல் ராபர்ட் பாடல்களில் இறையியல் சிந்தனை
– தே. யோசுவா 110
23. அம்பையின் படைப்பும் ஆளுமையும்
– கோ. பூர்ணிமா & முனைவர் சு. சாந்தி 113
24. நாகராசா கோயிலில் பூசை முறைகளும் வழிபாடும்
– திருமதி மு. பழனியம்மாள் 117
25. தமிழர் மரபும் சமயங்களின் வருகையும்
– முனைவர் பெ. மோகன் 122
26. தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் வழி சிலப்பதிகாரம்
– செ. மஞ்சு & முனைவர் சு. சாந்தி 126
27. பழந்தமிழ் மக்களின் பண்பாட்டு விழுமியங்கள்
– திருமதி ஜெனோவா & முனைவர் சு. சாந்தி 133
28. தோடர் மக்களின் பண்பாடும் பழக்கவழக்கங்களும்
– முனைவர் அ. மகாலட்சுமி 139

 ISSN : 2349 - 1914

# தமிழர் மரபும் சமயங்களின் வருகையும்

**முனைவர் பெ. மோகன்**
பேராசிரியர், தமிழ்த்துறை,
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,
பல்லாவரம், சென்னை.

மனித சமூகம் சமயங்களைத் தவிர்த்து இயங்குவது இல்லை. தமிழ் இலக்கிய மரபில் சமயக் கருத்துகள் தொடர்ந்து வெளிப்பட்டு வருகின்றன. கால மாற்றங்களில் பல்வேறு சமயக் கருத்துகள் வந்து சேர்ந்துள்ளன. அதன்வழி மனித வாழ்வியல் நம்பிக்கைகளும் மாற்றம் கண்டுள்ளன. தமிழர் மரபில் மாற்று சமயக் கருத்துகள் வந்து சேர்ந்துள்ள முறைகளையும், அதனால் தமிழர் சிந்தனை மரபில் ஏற்பட்ட மாற்றங்களையும் சுருக்கமாக ஆய்வு செய்வது இக் கட்டுரையின் நோக்கமாகும்.

### சமயங்களின் தோற்றம்

இலக்கியங்கள் மக்கள் வாழ்வியலை வெளிப்படையாகக் காட்டுபவை. இதனைத் தவிர்த்து, அடிப்படையான நான்கு சமயக் கோட்பாடுகளின் அடிப்படையிலான வாழ்வியலைத் தேடுதல் சாலச் சிறந்தது எனலாம். மனித நாகரிகம் இயற்கை வழிட்டில் தொடங்கியது. அதன் வளர்ச்சியில், தனக்கானக் கடவுள் கட்டமைப்புகள், புது வகையான சமய உருவ வழிபாடுகள் போன்றவை உருவாக்கப்பட்டன. உருவ வழிபாடுகளின் வழி சமய உருவாக்கம் என்பது வீறுகொள்ளத் தொடங்கியது. மனித இனத்தின் தேவைக்கு ஏற்ப சமயங்களின் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டன. வலுவான கோட்பாடுகளின் பின்னணியில் சில சமயங்கள் உதிரிகளாகப் பிரியத்தொடங்கின.

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மனித இனம் இயற்கை நிகழ்வுகளைப் புனிதப்படுத்த முயன்றது. இப் புனிதத்தின் அடிப்படையில் சூரியன், நிலவு, நீர், உழவு, விவசாயம், காளை மாடுகள் அனைத்தும் வணங்கும் தெய்வங்களாக மாறத் தொடங்கின. இத்தகைய இயற்கை நிகழ்வுகள் சார்ந்த வாழ்வியலோடு தனக்கான சமயத் தொன்மங்களாக உருவாக்கிக் கொண்டனர்.

இயற்கை வழிபாட்டின் வழியே குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் நில அடிப்படையில், அந்நிலத்திற்கானத் தொழிலை ஆதாரமாக்கி வாழ்வியல் தொடர்புடைய கடவுள்கள் உருவாக்கப்பட்டன. இத்தகைய இயற்கை நெறிச் சார்ந்த கடவுளின் பின்புலத்தில் வளர்த்தெடுக்கப்பட்டதே சமயங்கள்.

### வடநாட்டு சமயங்கள்

இன்றுள்ள சமய முறைகள் அனைத்தும் தமிழகத்தில் தோன்றியவை அல்ல. தமிழரின் இயற்கை சார்ந்த சிறு தெய்வ வழிபாட்டு முறையில் வட இந்திய சமயங்கள் நுழைக்கப்பட்டன. வட இந்தியாவில் தோன்றிய பௌத்த சமயம், தென்னிந்தியாவில் உள்ள தமிழ் நாட்டில் நுழைந்து ஆதிக்கம் செலுத்தியது. இதேபோல வேறு சில சமயங்களும் தமிழகத்தில் புகுந்து தனது இருத்தலை நிலைநாட்ட முயன்றது. இதன் விளைவாகவே தமிழின வழிபாட்டுமுறை பல நெகிழ்வுகளை அடைய வேண்டியதாயிற்று.

“பௌத்தம் தமிழ்நாட்டுக்கு வந்த காலத்தில் வேறு வடநாட்டு சமயங்களும் இங்கு வந்து சேர்ந்தன. அவை ஆருகதம் எனப்படும் ஜைன சமயமும், பிராமண சமயம் எனப்படும் வைதீக சமயமும், பூரணன் என்பவரை வழிபட்டொழுகும் ஆசீவக சமயமும் என்பன. இந்த சமயங்கள் வடநாட்டில் தோன்றியவை.” இக்கூற்று வடநாட்டு சமயங்களே தமிழகத்தில் ஊடுறுவி உள்ளன என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. இத்தகைய வடநாட்டு சமயங்கள் தங்களை நிலைநிறுத்திக்கொள்ள, இங்கு இருந்த இயற்கை வழிபாட்டு முறையை

அழித்தும், மாற்றியும் தங்கள் சமயங்களை உருவாக்கியுள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

வடநாட்டில் இருந்து தென்னாட்டிற்கு வந்த நான்கு சமயங்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கொள்கைகளைக் கொண்டிருந்தன. சமயங்களின் மேலாண்மைக் காரணமாக பிற சமயங்களை இழித்தும், பழித்தும் பேசி அமைதியான தமிழகத்தில் வடநாட்டு சமயங்கள் தங்கள் இருத்தலுக்காகச் சமயப் பூசல்களைக் கிளப்பபிவிட்டன. தமிழர் கொண்டாடும் திருவிழாக்களும், பண்டிகைகளும் வடநாட்டு தத்துவ தர்க்க முறைக்கு ஏற்ப ஊடுறுவச் செய்தனர். இப் பின்புலத்தில் சமயங்கள் ஒன்றையொன்று அழிக்கத் தொடங்கின. இப் பின்னணியில் பௌத்த, சமண சமயங்களின் அழிவும், வைதீக மரபும் வடகலை, தென்கலை (சைவம், வைணவம்) என்னும் இரு கூறுகளாகப் பிரியத்தொடங்கியதை சமய வரலாற்றின் வழி அறிய ஏதுவாகிறது.

**சமயமாற்ற வரலாற்று நிகழ்வு**

சமய ஆதிக்களுக்கு ஏற்ப மக்கள் சமயங்களை மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. சமயங்களின் பெயரால் அடிமைத்தனத்தை விதைக்க நினைத்த சமயங்களை மக்கள் நிராகரித்தனர். சமயத் திணிப்பின் காரணமாகவும், கீழ் மேல் என்ற பேதத்தின் காரணமாகவும் சமயமாற்றம் சமூகத்தில் நிகழத்தொடங்கியது. இதன்முறையே, ‘‘பௌத்த சமயம் கீழ்சாதி, மேல்சாதி என்ற பிறப்பினால் பிறப்பினால் உயர்வு தாழ்வு பாராட்டப்படியினாலும் எக்குடியிற் பிறந்தோராயினும், அன்னவர் கல்வி அறிவுகளிற் சிறந்தோறாய்த் தம் தமக்கொள்கைப்படி ஒழுகுவாராயின், அவரையுந் தங்குருவாகக் கொள்ளும் விரிந்த மனப்பான்மை கொண்டிருந்தமையாலும், அக்காலத்தில் சாதிப்பாகுபாடற்றிருந்த தமிழர் இந்து சமயத்தை ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளனர்.’’ இக்கூற்று பெரும் வரலாற்று மாற்றத்தை நினைவூட்டுவதாகும். பி. ஆர். அம்பேத்கர் இந்து சமயத்தை துறந்து புத்த சமயத்தை **1956–**ஆம் ஆண்டு அக்டோபர் **14–**ஆம் நாள் புத்த சமயத்தில் ஆறு இலட்சம் தலித் மக்களுடன் புத்த சமயம் சேர்வதற்குக் காரணமாக இருந்திருக்கலாம்.

**இந்து சமய உருவாக்கம்**

இந்து சமயம் என்பது தமிழகத்தில் தொடக்க காலங்களில் இல்லாத ஒன்று. இது வடநாட்டு சமயங்களில் ஒன்றெனலாம். தமிழக சிறுதெய்வ வழிபாட்டு முறைகளுடன் கலந்து உருக்கொண்டு இந்துசமயமானதாகும். ‘‘அழியும் நிலையில் இருந்த வைதீக சமயம் பழைய தமிழர் சமயத்தைப் பற்றிக் கொண்டது. இரண்டிற்கும் இடையே ஓர் இணைப்பு ஏற்பட்டது. இரண்டு சமயங்கள் இணைந்து ‘இந்து சமயம்’ என்று புதிய பெயர் சூட்டப்பட்டது. தமிழர் சமயம் வைதீக சமயத்துடன் இணைந்தபோது தெய்வங்களுக்குள் புதிய உறவுமுறைகள் ஏற்பட்டன.’’

பௌத்த சமணம் அழிந்து, வைதீகம் இருகூறாகப் பிரிந்து, தமிழ்க் கடவுள் அனைத்தும் ஆரியக் கடவுள்களாக மாற்றப்பட்டன. தமிழ் முருகன் சுப்பிரமணி ஆனான். முருகனின் தமிழ் மனைவி வள்ளி, அவளுடன் அரிய மனைவி தெய்வானை இணைக்கப்படுகிறாள். தமிழருடைய சிவன் ஆரிய உருத்திரனோடு பொறுத்தப் பட்டான். தமிழருடைய கொற்றவை ஆரிய பார்வதியின் அம்சமாக ஆக்கப்பட்டாள். தமிழருடைய திருமால் ஆரிய விஷ்ணுவாக மாற்றப்பட்டதை வரலாற்றின் வழி உணரமுடிகிறது. இத்தோடு மட்டுமல்லாமல், பௌத்த சமணக் கோயில்கள் பிற்கால வைதீக ஆதிக்கத்தால் இந்து கோயில்களாக மாற்றப்பட்டதும் மறுக்க முடியாத உண்மைகளாகும்.

சமணர்களில் பலர் சைவர்களாகவும், வைணவர்களாகவும் சமயம் மாறினர். சமண வீழ்ச்சியால், சமணக் கோயில்கள் பல இந்து சமயத்தில் கலந்துவிடலாயின. சமயம் மாறியபொழுது மறவாமல் சமண சமய ஒழுக்கங்களையும், கொள்கைகளையும் இந்து சமயத்தில் புகுத்திவிட்டனர். இந்து சமயத்தில் பல சமண சமயக் கொள்கைகள் கலந்துள்ளதை நாம் அறிய முடிகிறது.

பௌத்த சமண சித்தாந்தங்கள் பெரும்பாலும் சில வேறுபாடுகளுடன் ஒன்றாக இருப்பதால், இரண்டிற்குமான பொதுவான கருத்தாக்கங்கள் மட்டும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. பௌத்த வாழ்வு என்பது அடுத்தவருக்கு உதவுதல் என்ற போக்கையே அடிநாதமாகக் கொண்டுள்ளது. பிறப்பு, இறப்பைக் கடந்து மோட்சம் எனப்படும் வீடுபேற்றினை அடைதல், மறுபிறவி கூடாது என்னும் 12 தத்துவங்களின் அடிப்படையில் பௌத்த வாழ்வியலை அடையாளப்படுத்த முடியும்.

**“பேதைமை செய்கை உணர்வே அருவுரு**
**வாயில் ஊறே நுகர்வே வேட்கை**
**பற்றே பவமே தோற்றம் வினைப்பயன்**
**இற்றென வகுத்த இயல்பீ ரானும்**
**பிறந்தோர் அறியில் பெரும்பேறு அறிகுவர்**
**அறியார் ஆயின் ஆழ்நர களிவோர்”**

இத்தகைய 12 வகை சார்புகளால் பிறப்பு, இறப்பு உண்டாகிறது. இத்தகைய சார்புகளை அறுத்தால் வீடுபேற்றினை அடையலாம் என்பதே பௌத்த வாழ்வியல் தத்துவமாகும். சாதி பேதமற, ஏற்றத் தாழ்வற்ற, வர்க்க பேதமற்ற சமுதாயத்தை அமைப்பதே பௌத்த சமயக் கோட்பாடாகும்.

**பௌத்த சமண சித்தாந்தம்**

- ❖ கொலை, வேள்வியை எதிர்த்தல்.
- ❖ சாதி வேற்றுமை பாராட்டுவதில்லை; பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிப்பது இல்லை.
- ❖ தாய்மொழிக்கு உயர்வளித்தல்.
- ❖ உன்னதமான பயிர்த்தொழிலை போற்றிப் பாதுகாத்தல்.
- ❖ ஏழை மக்களிடம் தானம் பெறாமை.
- ❖ ஏழை மக்களுக்கு உணவு, அடைக்கலம், மருந்து, கல்வி என்னும் நால்வகைத் தானங்களையும் செய்தல்.
- ❖ தியான முறையில் அமைதி.
- ❖ மதுபானங்களை உட்கொள்ளாமை.
- ❖ கொல்லாமை, தீங்கு செய்யாமை, அன்புகாட்டுதல்.
- ❖ பூ, சந்தனம், வாசனைச் சுண்ணம், எண்ணெய் முதலிய நறுமணங்களை நுகராமை.
- ❖ பஞ்சணை முதலியவற்றை நீக்கித் தரையில் படுத்து உறங்குதல்.
- ❖ இசைப்பாட்டு, கூத்து, நாடகம் முதலிய காட்சிகளைக் காணாதிருத்தல்.
- ❖ பொன், வெள்ளி முதலியவற்றைத் தொடாதிருத்தல்.

“விண்ணுலக வீடுபேற்றிற்கு வழி சமய நம்பிக்கையிலோ அல்லது வழிபாட்டிலோ இல்லை. அதற்கு உண்மையில் வழி நல்லதைச் செய்வதிலும், தீயதைத் தவிர்ப்பதிலுமே உள்ளது.” இத்தகைய வழிபாட்டு முறையிலான வாழ்வியலை பௌத்த சமண சித்தாந்தங்கள் வெளிப்படுத்துகின்றன.

**வைதீக சித்தாந்த வாழ்வியல்**

சைவ, வைணவ சித்தாந்தம் என்று பிரித்தறியாமல் இரண்டிற்கும் பொதுவான வைதீக சித்தாந்த வாழ்வியலை அனுகுவது பொருத்தமுடையதாகும். சோழர் காலத்தில் வைதீக சமயம் கோலோச்சி, எல்லாத் திசைகளிலும் அதிகாரம் செலுத்தியுள்ளது. புரோகிதர்களாக இருந்து அரசின் எல்லாச் சலுகைகளையும் அனுபவித்து வந்த பிராமணர்களை எதிர்க்க வேண்டிய அவசியம் வேளாளர் மரபினருக்கு தேவையானது. வேளாளர் பிற்காலச் சோழர் காலத்தில் கிளர்ந்தெழுந்து, தங்களுக்கான தனி அடையாள மையமிடலை நடத்த முனைந்தனர். இதன் விளைவாக உருவாக்கப்பட்டதே வைதீகப் பிளவு என்பதை அறியலாம். வைதீக மரபு பிறழாமலும், ஆகமநெறி தவறாமலும், புதிய சைவ சித்தாந்தம் உருக்கொள்ளத் தொடங்கியிருக்கலாம். அந்தணர்கள் நிலங்கள், கோயில் நிர்வாகம் இவற்றைப் போன்ற வருமான நிர்வாகத்தை வேளாளர் சமூகம் முன்னெடுத்தது. இப்

பின்புலத்தில் சமண மடம், திருப்பனந்தாள் மடம், தருமபுரம் மடம் போன்ற வேளாள சைவ மடங்களை தோற்றுவித்திருக்கின்றனர் என்பதை உணர முடிகின்றது.

“உடல், அதனை நன்கு பராமரிக்கும் யோகப் பயிற்சி, மூச்சுப் பயிற்சி என்பவற்றை நாயன்மார்களும், ஆழ்வார்களும் மேற்கொள்ளவில்லை. தம் வாழ்நாள் முழுவதும் இறையருளால் தாம் பெற்ற ஆனந்தத்தை மக்களுக்குப் பகிர்ந்தள்ளிக்கவும் அவர்கள் துயர் துடைக்கவுமே பயன்படுத்தினர்” இக்கூற்று வைதீக சமயத்தினர் யோகம், மூச்சுப் பயிற்சியினை மேற்கொள்ளவில்லை என்பதைத் தெளிவுபடுத்துகிறது. பிற்காலச் சூழலில் இத்தகைய மரபுகளை பௌத்த, சமண நெறிகளிடமிருந்தே பெற்றுள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

**வைதீக சித்தாந்தம்**

- ❖ வைதீக சமயம் கொலை, வேள்வி செய்தது.
- ❖ பிறப்பினால் உயர்வு, தாழ்வு கற்பித்தது. தமிழைப் புறக்கணித்தது; சமஸ்கிருதம் தேவபாஷை என்றது.
- ❖ தங்கள் வேதத்தை தங்களைத் தவிர பிறர் எவரும் படிக்கக்கூடாது என்று தடுத்தது.
- ❖ உன்னதமான பயிர்த்தொழிலை இழிவான தொழில் என்று கற்பித்தது.
- ❖ மக்களுடைய அறியாமையைப் பயன்படுத்தி நிலதானம் முதல் கன்னியாதானம் வரை பலவகைத் தானங்களைப் பெற்றது.
- ❖ ஏழுபிறவி நம்பிக்கை இருந்தது.
- ❖ ஆத்மாவிற்கு அழிவில்லை என்று நம்பினர்.
- ❖ நான்கு வர்ண சாதிப் பாகுகளைக் கையாண்டனர்.
- ❖ பாவ, புண்ணிய நம்பிக்கை இருந்தது.

“பக்தியும், தத்துவமும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்புடையனவாகும். எனவே ஆழ்வார்கள் பக்தியின் மேன்மையை வெளிப்படுத்தும் பொழுது இறை, உலகம், மாய, மோட்சம் பற்றிய தத்துவக் கருத்துகளும், அவர்களுடை பாடல்களில் இயற்கையாகவே முயற்சியுமின்றி கூறப்பட்டுள்ளன.” இக்கூற்றின் வழி ஆழ்வார்களின் பக்தி மார்க்கத்தை அவதானிக்க முடிகிறது. இல்லற வாழ்க்கையை மேற்கொண்டு, உலக இன்பங்களை நுகர்ந்தவாறே தூய பக்தியின் மூலம் இறைவனை அடைய முடியும் என்னும் கருத்தாக்கங்களை வைதீக மரபு தெளிவுபடுத்துகிறது.

**மேற்கோள்கள்**

மயிலை. சீனிவேங்கடசாமி, பௌத்தமும் தமிழும், 2007, 33.

மேலது, 32.

மேலது, 8

மணிமேகலை

ஓ.ரா. கிருஷ்ணன்,பௌத்த அறிவியல், 2012, 15.

அ.ச. ஞானசம்பந்தன், திருமந்திரம், 2002, xiv.

கே.ஆர். விட்டல்தாஸ், ஆழ்வார்களும் இந்திய வைணவ இலக்கியங்களும், 2012, 122.